Aparajitha

# வெற்றியின் விதைகள்

## காலாண்டுச் செய்திமடல்

## ஏப்ரல் - சூன் 2019

1 கோடி

மாணவர்களுக்குத்

தளிர்த்திறன் திட்டம்

வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்

# 30

## இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்

# வணக்கம்!

சின்னஞ்சிறு ஊற்றில் பிறக்கும் நீர், தனக்கு அருகிலிருக்கும் உயிர்கள் சிலவற்றிற்குப் பயன் தருகிறது. அது ஓடையாய், சிற்றாறாய், பேராறாய் பரந்து விரிகிறபொழுது அந்தந்த நிலைக்கேற்ப பல்லுயிர்களுக்குப் பயன் தருகிறது. அதனைப்போலவே பத்தாண்டுகளுக்கு முன்னர் சில மாணவர்களோடு தொடங்கிய தளிர்த்திறன் திட்டத்தின் பயணம் தற்பொழுது “ஒரு கோடி” மாணவர்களைச் சென்றடைந்து இருக்கிறது. அப்பயணம் பற்றிய பறவைப் பார்வையைத் தருகிறது இவ்விதழின் முதற்பதிவு. இந்தியாவின் தென்முனையில் தொடங்கிய அதன் பயணம் வடமுனைக்கு சற்று அருகில் இமயத்தின் மடியில் இடம்பெற்று இருப்பதைக் கூறுகிறது இரண்டாம் பதிவு.

கற்றல் என்பது இருவழிப்பாதை. அதனைக் கண்டறிந்த தன்னார்வலர் ஒருவரின் பதிவே மூன்றாவதாக இடம்பெற்று இருக்கிறது. தங்களது நகரை மேம்படுத்த முனைந்திருக்கும் இரண்டு வெவ்வேறு அமைப்புகள் தமது ஊர்களில் தளிர்த்திறன் திட்டத்தைச் செயற்படுத்திய செய்திகளை அடுத்த இரண்டு பதிவுகளில் பகிர்ந்திருக்கிறார்கள்.

அனைத்தையும் படியுங்கள் . . .

தங்களின் கருத்துகளைப் பகிருங்கள். . .

நண்பர்களுக்குப் பரப்புங்கள். . .

*தொடர்ந்து தங்களின் ஆதரவையும் ஆலோசனையையும் எதிர்நோக்கும்,*

***ஆசிரியர் குழு***

## உள்ளடக்கம்


வணக்கம் . . . . . . . . . . . . . . . . . . 2

ஒரு கோடி மாணவர்களுக்கு. . . . . . . 3

ஹிமாசல் பிரதேசத்தில் தளிர்த்திறன் திட்டம். . . . . . . . . . . . . . . . . . . . . . . . 4

கற்றார்கள் - கற்றேன் . . . . . . . . . . . 5

வாழ்வின் மேன்மைக்கு வாழ்க்கைத்திறன்கள். . . . . . . . . . . . . 6

நட்சத்திர மாணவர்களின் தன்னார்வப்பணி. . . . . . . . . . . . . . . 7

எதிரொலிகள். . . . . . . . . . . . . . . . . . . 8



*அபராஜிதா அறக்கட்டளை*
*5அ, வி.பி.இரத்தினசாமி சாலை*
*பீபீ குளம்*
*மதுரை 635002*

*0452-4375252*

info@aparajitha.org


***த**ளிர்த்திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், அரியானா ஆகிய 6 மாநிலங்களில் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

# ஒரு கோடி மாணவர்களுக்கு . . .

“விழிப்புணர்வின் வழியாக நிலைமாற்றம்” என்னும் நோக்கத்தோடு வளரிளம் பருவத்தினருக்கு வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்கும் தளிர்த்திறன் திட்டம் 2008-09ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் ஐந்து பள்ளிகளில் 465 மாணவர்களோடு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் பயனையும் விளைவையும் அறிந்த திருவாளர்கள் திம்மந், தேவாஞ்சி ஆகியோரின் முன்முயற்சியால் 2012-13ஆம் கல்வியாண்டில் குஜராத் மாநிலத்தில் டிம் டிம் தாரா என்னும் பெயரில் குஜராத்தி மொழியில் 100 பள்ளிகளில் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2017-18ஆம் கல்வியாண்டில் இராஜஸ்தான் மாநிலத்தில் இந்தி மொழியில் டிம் டிம் தாரே என்னும் பெயரில் இராஜஸ்தான் மாநிலக் கல்வி அமைச்சகத்தின் துணையோடு 1411 பள்ளிகளில் தொடங்கப்பட்டது. அக்கல்வியாண்டிலேயே மத்தியப் பிரதேசம் இந்தூர் மண்டலத்தில் அம்மண்டல ஆணையரின் முயற்சியால் 200 பள்ளிகளில் தொடங்கப்பட்டது; உத்தரபிரதேசத்தில் 50 பள்ளிகளில் தொடங்கப்பட்டது; ஹரியானாவில் அம்மாநில கல்வித்துறையின் முயற்சியால் 244 பள்ளிகளிலும் தொடங்கப்பட்டது.




2018ஆம் ஆண்டு சனவரி மாதம் 20ஆம் நாள் ஹரியானா மாநிலத்தில் டிம் டிம் தாரே பாடம் ‘எடுசாட்’ என்னும் கல்வித்துணைக்கோளின் வழியாக ஒளிபரப்பப்பட்டது. அதன் விளைவாக ஒரே நேரத்தில் 10000 பள்ளிகளில் பயின்ற 2,50,000 மாணவர்கள் அப்பாடத்தைக் கற்றனர். அம்முயற்சி வெற்றிபெற்றதால், 2018-19ஆம் கல்வியாண்டு முழுவதும் ஹரியானா, குஜராத் மாநிலங்களில் இத்திட்டத்தின் பாடங்கள் ‘எடுசாட்’ வழியாக ஒளிபரப்பப்பட்டன. 73,280 பள்ளிகளில் பயிலும் 91,10,000 மாணவர்கள் பயன்பெற்றனர். அதேவேளையில் தமிழ்நாடு, ராஜஸ்தான், மத்திபிரதேசம், உத்திரபிரதேசம், ஆகிய மாநிலங்களில் உள்ள 5915 பள்ளிகளில் பயிலும் 9,44,895 மாணவர்களுக்கு அவர்தம் ஆசிரியர்களால் இப்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வகையில் இத்திட்டம் 2018-19ஆம் கல்வியாண்டில் **6 மாநிலங்களிலுள்ள 79,195 பள்ளிகளில் பயிலும் 1,00,54,895 மாணவர்களுக்குப்** பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறது. வரும் கல்வியாண்டுகளில் இத்திட்டம் மேலும் பல மாநிலங்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது; மேலும் சில கோடி மாணவர்கள் பயனடைய இருக்கிறார்கள்

*- தி. அ. பத்மநாபன்*

# ஹிமாசல் பிரதேசத்தில் தளிர்த்திறன் திட்டம்



அபராஜிதா வழங்கும் வாழ்க்கைத்திறன் கல்வி தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியபிரதேசம், ஹரியானா ஆகிய மாநிலங்களைத் தொடர்ந்து ஹிமாசல் பிரதேசத்தில் 2019-20ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட இருக்கிறது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 2019 மார்ச் 5ஆம் நாள் அரசின் சார்பில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் மாநிலத் திட்ட இயக்குநர் திருமிகு ஆஷிஷ் கோலி ஹ.ஆ.ப. அவர்களும் அபராஜிதாவின் சார்பில் கல்வி முயற்சிகளின் தலைவர் திருமிகு தி.அ.பத்மநாபன் அவர்களும் கையெழுத்திட்டனர். இதன்படி தளிர்த்திறன் திட்டத்தின் இந்தி வடிவமான டிம் டிம் தாரே அம்மாநிலத்திலுள்ள 10000 பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிப்படியாக செயல்படுத்தப்பட உள்ளது. முதற்கட்டமாக 2019-20ஆம் கல்வியாண்டில் 2500 பள்ளிகளில் இத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரையுள்ள அனைத்து வகுப்புகளிலும் வாரத்தில் ஒரு மணிநேரம் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்த ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. அதன் முதற்படியாக, 2019 மார்ச் 5ஆம் நாள் சிம்லாவில் மாநில அளவில் ஆசிரியப் பயிற்றுநர்களுக்கான பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. இதில் வட்டார வள நடுவம், ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் பணிபுரியும் 55 ஆசிரியர்கள் பங்கேற்றனர். அவர்களுக்கு வாழ்க்கைத்திறன் கல்வியைப் பற்றி ஹிமாசல் பிரதேச டிம் டிம் தாரே திட்ட மேலாளர் திருமிகு ரூனம் கௌசிக் பயிற்சி அளித்தார்.

*- ரூனம் கௌசிக்*

# கற்றார்கள் - கற்றேன்

மகேஷ்வர் என்னும் வரலாற்றுப் புகழுடைய சிறிய நகரம் மத்தியபிரதேசத்தில் அமைந்திருக்கிறது. நர்மதை ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் அந்நகரம் அழகிய கோட்டைக்கும் கண்கவரும் மலைத்தொடருக்கும் புகழ்பெற்றது. நான் என் பெற்றோரைக் காண மகேஷ்வருக்குச் சென்றிருந்தேன். என் தந்தை, அங்குள்ள பெண்கள் உயர்நிலைப்பள்ளியின் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு கல்வித்துணைச் செயற்பாட்டில் வழிகாட்டவும் உதவவும் விரும்பியதால், அப்பள்ளியின் தலைமையாசிரியரை நான் கட்டாயம் சந்திக்க வேண்டும் என்றார். அங்கிருந்த ஆசிரியர்களோடு இயல்பாகக் கலந்துரையாடியபொழுது, அம்மாணவர்கள் வீண்பேச்சிலும் சோம்பலாக இருந்தும் நாள் முழுவதும் தங்களது ஓய்வுநேரத்தைச் செலவிடுகிறார்கள் என்று தெரிந்தது. அதனடிப்படையில் அம்மாணவர்கள், நேரத்தின் அருமையை உணர்ந்து அதனை மிகவும் பயனுள்ள வகையில் செலவிட உதவுவதற்காக அவர்களுக்கு நேரமேலாண்மை, இலக்கமைத்தல் ஆகியன பற்றிய பயிலரங்கம் ஒன்றை நடத்துவது என்று முடிவுசெய்தோம். அதன்படி 2019 சனவரி 3, 8ஆம் நாள்களில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 70 மாணவர்களுடன் கலந்துரையாடினேன். டிம் டிம் தாரே பாடங்களைத் திரையிடுவதற்குத் தேவையான கருவிகளை எங்களால் ஏற்பாடு செய்ய முடியாததால், நேரமேலாண்மை, இலக்கமைத்தல் ஆகிய பாடங்களிலுள்ள சில செயற்பாடுகளின் வழியாக அந்தக் கலந்துரையாடல் வகுப்பை வழிநடத்தினேன். அதிலிருந்தது தாம் கற்ற பயனுள்ள குறிப்புகளுக்காகவும் பாடத்தின் முடிவிலிருந்த தொகுப்புரைக்காவும் அம்மாணவர்கள் பாராட்டினர். அவர்களில் சிலர் மிகவும் உற்சாகமடைந்தனர்; தொடர்ந்து அவர்களது பள்ளிக்கு நான் வரவேண்டும் என அழைத்தனர். அவர்களது பாராட்டாலும் நன்றியுணர்வாலும் நான் நெகிழ்ந்துபோனேன்.



நமது அறிவை, திறமையை, நேரத்தை நமது சமுதாயத்திற்காகச் செலவிடும்பொழுது ஒரு தனித்துவமிக்க மனநிறைவு நமக்குக் கிடைக்கிறது. அப்பொழுது, பெருநகரங்களில் அதிக வசதிகளை அனுபவிக்கும் நமது வாழ்க்கையோடு ஒப்பிடும்பொழுது மிகவும் வேறுபட்ட சூழலில் வாழும் மனிதர்களோடு கலந்துபழகுவதற்கான வாய்ப்பினை நாம் பெறுகிறோம். அவ்வாறுதான் தன்னார்வலராக, எனது சமுதாயத்திற்கு ஒரு துளியளவுப் பணியை நான் செய்வதாக எண்ணி மனநிறைவான உணர்வைப் பெற்றேன்.

அன்று நான் பெற்ற அனுபவத்தை நினைவுகூர்ந்தபொழுது இதுபோன்ற பயிலரங்கில் நிகழும் கற்றல் ஒருவழிப் பாதையன்று என்பதை உணர்ந்தேன். அதில் மாணவர்களாகப் பங்கேற்பவர்கள் மட்டும் பயிற்சிபெறுவதில்லை; பயிற்றுநரும் அதனால் பயனடைகிறார். அந்தப் பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்கள் நேரமேலாண்மை, இலக்கமைத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் கற்றுக்கொண்டார்கள்; நன்றியுணர்வு, பகிர்தல், பேணுதல் ஆகியவற்றின் மதிப்பை நான் கற்றுக்கொண்டேன்.

*- ப்ரீத்தி புரோஹித்*
*நொய்டா*

# வாழ்வின் மேன்மைக்கு வாழ்க்கைத்திறன்கள்

'ஒருவர் தனது செயல்திறனைப் பெருக்கிக்கொள்ளவும் தனது வேலையில் மேன்மையும் வளர்ச்சியும் அடைய பள்ளி, கல்லூரி ஆகியவற்றில் கற்றனவற்றிக்கு அப்பால் வேறு சில திறன்களையும் கற்றுக்கொள்ள வேண்டும்' என்கிறது உலகளவில் நிகழ்த்தப்பட்ட ஆய்வு ஒன்று. அந்தச் சில திறன்கள், 'வாழ்க்கைத் திறன்கள்' ஆகும். அவை, ஒருவர் தனது தனிப்பட்ட வாழ்விலும் தொழில்வாழ்விலும் மேன்மையடைய உதவுகின்றன.

எனவேதான், எங்களது 'ஒளிரும் ஈரோடு ஃபவுண்டேசன்' ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட பெரியவலசு என்னும் இடத்திலுள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் தளிர்த்திறன் திட்டத்தை 2015ஆம் ஆண்டில் வெள்ளோட்டமாகத் தொடங்கியது. இதன் விளைவாக, 9 முதல் 13 வயது வரையுள்ள மாணவர்களிடையே நேரமேலாண்மை, கற்றலில் கவனம், பிறருடன் பழகுந்திறன், பிறபாலினரை மதித்தல் ஆகியன போன்றவற்றில் குறிப்பிடத்தக்க நடத்தைமாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைக் கண்டது. ஆகவே இத்திட்டத்தை ஈரோடு மாநகராட்சிப் பகுதியிலுள்ள 42 பள்ளிகளுக்கும் மாவட்டத்தின் பிறபகுதிகளிலுள்ள 50க்கும் மேற்பட்ட நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இத்திட்டத்தை விரிவாக்கம் செய்தது. இதனால் 5300 மாணவர்கள் பயனடைகின்றனர். 120க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வாழ்க்கைத்திறன் கல்வி பற்றி பயிற்சி பெற்றிருக்கின்றனர்; அவர்கள் திட்டத்தைச் செயற்படுத்திய பின்னர் இதனால் தாங்களும் புத்துணர்வு பெற்றதாகவும் வாழ்க்கைத்திறன்களின் முக்கியத்துவத்தைக் கற்றுக்கொண்டதாகவும் கூறுகின்றனர்.




இன்று உலகிலுள்ள இளைஞர்களில் பெரும்பான்மையோர் இந்தியாவில் இருக்கின்றனர். அவர்களது திறன்களை மேம்படுத்தினால், 'மக்கள்தொகை ஈவு' (Demographic Dividend) என்னும் வெகுமதியை பெருமளவில் நாம் பெற முடியும். எனவேதான், எமது நிறுவனம் வாழ்க்கைத்திறன்களை மாணவர்களுக்குச் செயல்துடிப்போடு கற்பிக்கும் பணியில் அபராஜிதா அறக்கட்டளையோடு இணைந்து ஈடுபட்டிருக்கிறது.

**- ரூ. ரிஜோ**

*திட்டச் செயலாக்குநர்*

*ஒளிரும் ஈரோடு ஃபவுண்டேசன்*

*ஈரோடு*

# நட்சத்திர மாணவர்களின் தன்னார்வப்பணி

தமிழ்நாட்டின் வேலூர் நகரில் அமைந்திருக்கும் 'வேலூர் தொழில்நுட்பக் கல்விநிறுவனம்' (Vellore Institute of Technology) என்னும் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் ஓர் உறுப்பாக 'நிலைத்த ஊரக மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நடுவம்' (Centre for Sustainable Rural Development and Research Studies) என்னும் நடுவம் இருக்கிறது. இந்நடுவம் சமூக-பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் ஆகியோருடன் இணைந்து நிலைத்த ஊரக மேம்பாட்டை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. அதன் ஒருபகுதியாக அந்நடுவம் மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்கும் நோக்கில், 2018-19ஆம் கல்வியாண்டில் வேலூரிலுள்ள என்.கே.எம். மேல்நிலைப்பள்ளி, ஈவெரா நாகம்மையார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் தளிர்த்திறன் திட்டத்தை அறிமுகம் செய்தது. அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், பணியாற்றும் ஆசிரியர்கள் வழங்கிய பின்னூட்டத்தின் அடிப்படையில் இத்திட்டத்தை மேலும் 5 பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்ய விரும்பியது.



எனவே, அரசுப்பள்ளிகளில் பயின்று 12ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்று 'நட்சத்திர மாணவர்கள்' என்னும் தகுதியோடு வேலூர் தொழில்நுட்பக் கல்விநிறுவனத்தில் பொறியியல் கல்வி பயிலும் மாணவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்தது. அவர்களுக்கு வாழ்க்கைத்திறன் கல்வியைப் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. அம்மாணவர்கள் வாழ்க்கைத்திறன் கல்வித் தன்னார்வளர்களாக வேலூர் நகரிலுள்ள 7 பள்ளிகளில் தளிர்த்திறன் திட்டத்தைச் செயற்படுத்தினர்.

வரும் 2019-20 கல்வியாண்டில் இத்திட்டத்தை 25 பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்ய இருப்பதாக இந்நடுவத்தின் பொறுப்பாளரான பேராசிரியர் முனைவர் சி.ஆர்.சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

*- மு. செந்தில்குமார்*

# எதிரொலிகள்

வாழ்க்கைத்திறன் கல்வித்திட்டம் 5 மாநிலங்களில் நடைபெறுவதைச் சிறப்பாக ஆவணப்படுத்தி இருக்கிறது அபராஜிதாவின் வாழ்க்கைத்திறன் கல்வித்திட்டத்திற்கான செய்திமடலின் 29ஆவது இதழ். தென்தமிழகத்தின் பல்வேறு பகுதியிலுள்ள மாணவர்களிடையே இத்திட்டம் ஏற்படுத்தியிருக்கும் விளைவுகளைப் பற்றிய அறிக்கை, உறுதியான வளர்ச்சி ஏற்பட்டிருப்பதற்கான சான்று ஆகும். அந்நிறுவத்தின் மேலாண்மையர்களும் பயிற்றுநர்களும் மேற்கொண்டிருக்கும் முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். தளிர்த்திறன் திட்டம் மேலும் பல சாதனைகளை நிகழ்த்த வாழ்த்துகிறேன்

***- பேராசிரியர் ஆர். ராஜா கோவிந்தசாமி***
*இயக்குநர், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி*
*மதுரை*

வாழ்க்கைக்கல்வி பள்ளிக்கல்வியின் ஓர் உறுப்பாகிவிட்டது என்பது உண்மையிலேயே சிறந்த சாதனை. தொழில்நுட்பத்தின் உதவியாலும் அபராஜிதா பணியாளர்களின் முயற்சியாலும் தளிர்த்திறன் திட்டம் எண்ணற்ற இளம் மனங்களைச் சென்றடைந்து அவர்களைப் பேணிவளர்க்கிறது. பாராட்டுகள்!

***- தேவாஞ்சி ஷா***
*பிரைட்சைடு கவுன்சிலிங்*
*சிங்கப்பூர்*

மிக நல்ல பணி. நமது நாட்டில் வாழும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இத்திட்டம் சென்றடைய வேண்டுமென்பதே எனது ஒரே விருப்பம். அனைவருக்கும் பாராட்டுகள்!

***- ஆர். கிருஷ்ணமூர்த்தி***
*மதுரை*

உங்களது ‘மதிப்பீடு’ நல்ல முடிவுகளைத் தந்திருப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்கிறேன். நீங்கள் தொடர்ந்து வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

***- முனைவர் எஸ். இராதாகிருஷ்ணா***
*ஹைத்ராபாத்*

இத்திட்டத்திற்காக நானும் சில பங்களிப்புகளை வழங்கியிருப்பதை எண்ணி மகிழ்கிறேன். இந்தியா முழுவதற்கும் இத்திட்டத்தை கொண்டுசெல்வதற்கு ஏற்றவர்கள் நீங்கள்தான். எனது நல்வாழ்த்துகள்!

***- ஜே. இராஜசேகரன்***
*இசையமைப்பாளர்*
*மதுரை*

தளிர்த்திறன் திட்டம் சென்றடைந்திருக்கும் பரப்பையும் வீச்சையும் கண்டு உண்மையிலேயே வியக்கிறேன்!!

***- க. வரதன்***
*தலைமை கலந்தாலோசனை அலுவலர், அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் (பி) லிமிடெட்*
*மதுரை*

வாழ்க்கைத்திறன் கல்வி, அனைத்து அல்லது பெரும்பான்மையான பள்ளிப் பாடத்திட்டங்களின் ஒரு பகுதியாக இருப்பதில்லை. இந்நிலையில் மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்கும் இத்திட்டத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்ட அனைவரையும் உண்மையிலேயே பாராட்டுகிறேன். இத்திட்டத்தை ஹரியானா மாநிலத்தில் செயல்படுத்துவதற்கான ஆணையைப் பெற்றவர்களையும் பாராட்டுகிறேன். விரைவில் அனைத்து மாநிலங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட வாழ்த்துகிறேன். இந்த நற்பணியை மென்மேலும் தொடருங்கள்.

***- எஸ். தெய்வராயன்***
*உதவி வணிக மேலாளர், அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் (பி) லிமிடெட்*
*பெங்களூரு*